**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 169/2012 P.W. 8 /L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கந்தகுமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. சுப்பன்னா | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 29.05.2024.

**இவ்வழக்கின் முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் தற்சமயம் பணிமாறுதலில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காவல் ஆணையாளர் அலுவலகத்தில் மத்திய குற்றப்பிரிவில் உதவி ஆணையளராக பணிபுரிந்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் திருவள்ளூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.முச. பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது ஆவடி காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் மத்திய குற்றப்பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். 19.03.2011ம் தேதி நான் குளச்சல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது தலைமை காவலர் விஷ்ணுகுமார் என்பவர் பதிவுச் செய்து வைத்திருந்த குற்ற எண் 84/2011, சட்டப்பிரிவுகள் 406, 420 இ.த.ச வழக்கினை என் விசாரணைக்குஎடுத்துக்கொண்டேன்.

2. அன்றையதினமே 18.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுந்தரதாஸ், சுந்தர்சிங் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன்.

(ஆவணங்களை பரீசிலனைச் செய்ததில் பார்வை மகசர் அ.சா.5ன் மூலம் 03.02.2021ம் தேதி குறியீடு செய்யப்பட்டுவிட்டது. பின்னர் 20.09.2023ம் தேதி அ.சா7 தனது விசாரணையின் போது இவ்வழக்கின் புகார் மனுவைப் பொறுத்து புகார் மனு அ.சா.ஆ. 5 என்பதற்கு பதிலாக அ.சா.ஆ. 4 என்று குறியீடு செய்யப்பட்டுவிட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்பதற்கு பதிலாக அ.சா.ஆ.5 என்று குறியீடு செய்யப்பட்டுவிட்டது. மேற்படி ஆவணங்களின் குறியீடு வரிசையை மாற்றுவதற்கு இருதரப்பிலும் கேட்கப்பட்டு ஆட்சேபணையில்லை என்று கூறியதால் மேற்படி வரிசை புகார் மனுவானது அ.சா.ஆ.5 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும் திருத்தம் செய்துக்கொள்ளப்பட்டது.) மேற்படி **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

3. மேலும் சம்பவயிட சாட்சிகளான முத்துக்குமார், ஜெயந்தி, சுனில் மேக்ளின் ராஜா, சிஜா ரெமிலா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் பணி மாறுதல் காரணமாக நான் வழக்குக் கோப்பை அடுத்து வந்த நிலைய பொறுப்பு அதிகாரியிடம் ஒப்படைத்து சென்றேன்.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மேற்படி சாட்சிய விசாரணை பதிவு தொடங்கியதில் இருந்து முடிவடையும் வரை எந்தவித இடையூறுகளும் இல்லை என்பதை பதிவுச் செய்யப்படுகிறது. சாட்சிய பதிவு முடிக்கப்பட்ட நேரம் மாலை 03.50 மணி ஆகும். மேற்படி விசாரணையின் போது மேற்படி நீதிமன்றத்தின் கணிணி அலுவலர் திரு. முரளி என்பவர் உடனிருந்தார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக திருவள்ளூர் மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து முரளி (System Officer) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,<br>இரணியல்.